# S.C. No. 204 / 2018

# 19.09.2022

**அ.த.சா.6, திரு. கணேசன், த/பெ. இராஜேந்திரன், வயது 36**

**சாட்சி**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வளசரவாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் புகைப்பட எடுக்கும் கடையை வைத்திருக்கிறேன். பாக்கியா மாடலிங் ஸ்டுடியோ என்ற பெயரில் நடத்தி வருகிறேன். கடந்த 2015 அக்டோபர் மாத வாக்கில் CD யை போட்டு தரும்படி போரூர் இராமச்சந்திரா காவல் நிலையத்தில் இருந்து உதவி ஆய்வாளர் என்னிடம் வந்து கேட்டார். Memory Card லிருந்து CD யை போட்டுக் கொடுத்தேன். ஃபோட்டோக்களும் பிரின்ட் செய்து கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் 10 ஃபோட்டோக்கள் மற்றும் குறுந்தகடு நான் மேற்சொன்ன வகையில் எடுத்துக் கொடுத்தாகும். அந்த ஃபோட்டோக்கள் (வரிசை 10) மற்றும் குறுந்தகடுடன் (வரிசை 1) சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை பரிசீலிக்க அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்சொன்ன ஃபோட்டோக்களை நான் சம்பவியடம் சென்று பார்த்து எடுத்தேன் என்றாலும், அவ்வாறே நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றாலும், தற்போது எதிரிகளுக்கு பயந்து மாற்றி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை விசாரித்த உதவி ஆய்வாளர் பெயர் தெரியாது. அவர் சீருடையில் இருந்ததால், காவல் துறையை சேர்ந்தவர் என்று கூறுகிறேன். 19.10.2015 அன்று உதவி ஆய்வாளர் வந்தார். அவருடன் ஒரு காவலர் வந்தார். நான் சம்பவயிடத்திற்கு நேரடியாக சென்று புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. சாபொ. 1 -ல் உள்ள புகைப்படங்கள்

காண்பிக்கப்படும் இடந்தான் சம்பவயிடம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். போலீசார் என்னை எனது கடையில் வைத்து விசாரித்தார்கள். நான் எடுத்து கொடுத்த ஃபோட்டோகளுக்கு பில் எதுவும் கொடுக்கவில்லை. பில் தேவையில்லை என்பதால், கொடுக்கவில்லை. நான் ஃபோட்டோ பிரின்ட் எதுவும் எடுத்துக் கொடுக்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க அவ்வாறு எடுத்து கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த Memory Card யாருடைய ஃபோனில் இருந்து எடுக்கப்பட்டது என்று நான் கேட்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**